### மனித வளங்களை வளர்ப்பதில் – மகாராஷ்டிரம், குஜராத் மாநிலங்களைவிட தமிழ்நாடு மாபெரும் சாதனை!

# அதிக வேலை வாய்ப்புகளை வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம்!

## ‘திராவிட மாடல்’ அரசின் சாதனைகளை புள்ளி விவரங்களுடன் விளக்கும் ‘ரிசர்வ் வங்கி’ ஆய்வறிக்கை!

சென்னை, ஜன.7–

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சி அதிக வேலை வாய்ப்புகளை வழங்குவதில் இந்தியாவில் முதலிடம் வகிக்கிறது என்றும் – மனித வளங்களை வளர்ப்பதில்** (Mandays) **மகாராஷ்டிரம், குஜராத் மாநிலங்களை விட தமிழ்நாடு மாபெரும் சாதனை படைத்துள்ளது என்றும் ரிசர்வ் வங்கியின் ஆய்வறிக்கை புள்ளி விபரங்களுடன் விளக்குகிறது.**

அதன் விபரம் வருமாறு :-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் பேரார்வம் கொண்டுள்ளார்கள். பெருந்தொழில்களைத் தொடங்கி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கில் தமிழ்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தொழில் முதலீடுகளை ஈர்த்துப் பல புதிய தொழிற்சாலைகளை உருவாக்கி வருகிறார்கள்.

அதே நேரத்தில் சிறுகுறு நடுத்தர தொழில்கள் அதிகளவில் தொடங்கிட ஊக்கமளிப்பதன் வாயிலாக சாதாரண மக்களும் அதிக வேலை வாய்ப்புகளைப் பெற்றுப் பயன்பெறுகின்றனர். இந்த வகையில் பொருளாதாரத்திலும் தொழில் வளர்ச்சியிலும் பல ஆண்டுகளாக முன்னிலையில் இருந்துவரும் குஜராத், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களை விட தமிழ்நாடு சிறுகுறு நடுத்தர தொழில்கள் மூலம் அதிக வேலை வாய்ப்புகளை வழங்கி மாபெரும் சாதனைகளை நிகழ்த்தி வருகிறது.

இந்திய ரிசர்வ் வங்கியின் 2023-2024 ஆம் ஆண்டுக்கான வளர்ச்சி குறித்த ஆய்வேட்டில் இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அதாவது தமிழ்நாட்டில் 39,699 சிறுகுறு தொழில்கள் உள்ளன. இவை 4,81,807 தொழிலாளிகளுக்கு வேலை வாய்ப்புகளை அளித்துள்ளது. இதன் மூலம் தமிழ்நாடு 8,42,720 மனித உழைப்பு நாள்களைக் (Mandays) கொண்டுள்ளது.

மகராஷ்டிரா மாநிலத்தில் 26,446 தொழிற்சாலைகள் உள்ளன. 6,45,222 தொழிலாளிகள் உள்ளனர். இம்மாநிலம் 7,29,123 மனித உழைப்பு நாள்களைக் கொண்டுள்ளது. குஜராத் மாநிலத்தில் 31,031 தொழிற்சாலைகள் உள்ளன. 5,28,200 தொழிலாளிகள் உள்ளனர். இம்மாநிலம் 7,21,586 மனித உழைப்பு நாள்களைக் கொண்டுள்ளது. தொழிலாளர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை வழங்குதல் அதிகளவில் உற்பத்திகள் செய்தல் ஆகியவற்றில் மனித உழைப்பு நாள்களில் குஜராத் மகாராஷ்டிரம் மாநிலங்களை விட தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது என்பதை இந்த ஆய்வு தெரிவிக்கிறது.

கோவிட் 19 காலத்தில் கதவடைப்பு முதலிய இடர்ப்பாடுகளால் தொழில்களும் வேலை வாய்ப்புகளும் குறைந்த நிலையை இந்த திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றபின் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு சீர்ப்படுத்தி வளர்ச்சியில் இன்று நல்ல முன்னேற்ற நிலையை அடைந்துள்ளது.

திராவிட மாடல் அரசு வேலை வாய்ப்புகளை அதிகரித்துள்ளதுடன் தொழிலாளர்களின் உற்பத்தித் திறனையும் அதிகரிக்கச் செய்து சிறந்த முறையில் வெற்றி கண்டுள்ளது. இந்தப் புள்ளி விவரங்கள் அடிப்படையில் தமிழ்நாடு 8,42,720 மனித உழைப்பு நாள்களைக் கொண்டு தொழிலாளர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை வழங்குவதில் இந்தியாவில் முதலிடம் பெற்றுள்ளது என்பதை இந்திய ரிசர்வ் வங்கியின் ஆய்வறிக்கை தெளிவுபடுத்தியுள்ளது.

தமிழ்நாடு ஒரு தொழிலாளிக்கு சராசரியாக 1.75 மனித உழைப்பு நாள்களை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் மகாராஷ்டிரம் ஒரு தொழிலாளிக்கு 1.13 மனித உழைப்பு நாள்களுக்கும், குஜராத் ஒரு தொழிலாளிக்கு 1.37 மனித உழைப்பு நாள்களுக்கும் மட்டுமே வேலை வாய்ப்புகளை அளிக்கின்றன. இந்தப் புள்ளி விவரங்கள் மற்ற இரண்டு மாநிலங்களை விட தமிழ்நாடு வேலை வாய்ப்புகளை அதிகரித்து உழைப்பாளிகளைத் தகுந்த முறையில் பயன்படுத்தியுள்ளது என்ற உண்மையைப் புலப்படுத்துகின்றன. அதேபோல பெரிய மாநிலங்களான உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் மனித உழைப்பு நாள்கள், தொழிலாளிகள் இடையே பெரிய வேறுபாடு காணப்படுவதாகவும் இந்த ஆய்வு குறிப்பிடுகிறது.

---

### தமிழ்நாடு ஆளுநரைக் கண்டித்து

## கடலூர் மேற்கு மாவட்டத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்!

### மாவட்டக் கழகம் அறிவிப்பு!

கடலூர், ஜன.7-

தலைமைக் கழக அறிவிப்பின்படி தமிழ்நாடு ஆளுநரை கண்டித்து கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று (07.01.2025 - செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணியளவில் கடலூர் மஞ்சக்குப்பம் தலைமை தபால் நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடைபெறுகிறது.

தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரைக் கண்டித்தும், ஒன்றிய அரசின் ஏஜெண்ட்டாக தமிழ்நாட்டின் உரிமைகளில் அத்துமீறல்களைச் செய்யும் ஆளுநரைக் காப்பாற்றிடவும், ஒன்றிய அரசின் மீதுள்ள தமிழ்நாட்டு மக்களின் கோபத்தை திசை மாற்றவும் வித்தைகளைச் செய்யும் அ.தி.மு.க. - பா.ஜ.க. கள்ளக் கூட்டணியைக் கண்டித்தும், கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று (07.01.2025 செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணியளவில் கடலூர் மஞ்சக்குப்பம் தலைமை தபால் நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

அது சமயம் ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர கழக ,பேரூர் கழக, வார்டு, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிகள் தொ மு ச நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என கடலூர் மேற்கு மாவட்டக் கழகம் அறிவித்துள்ளது.

---

### தமிழ்நாடு ஆளுநரைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

## சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணியினர் பெருந்திரளாகப் பங்கேற்பீர்!

### மாவட்ட அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

சென்னை, ஜன. 7 -

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் சட்டப் பேரவையில் தமிழ்த் தாய் வாழ்த்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆளுநர் உரையை வாசிக்காமல் வெளிநடப்பு செய்த தமிழ்நாடு ஆளுநரின் செயல்பாட்டை கண்டித்து, சைதாபேட்டை மார்க்கெட் அருகில் உள்ள கலைஞர் வளைவு (பனகல் கட்டிடம்) அருகில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆணைப்படி, இன்று (07.01.2025 - செவ்வாய்க்கிழமை) காலை 9 மணியளவில், கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

எனவே இந்த ஆர்ப்பாட்டத்தில் சென்னை தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட இளைஞர் அணி மாவட்டக் கழக துணை அமைப்பாளர்கள், பகுதிக் கழக அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக அமைப்பாளர்கள், வட்டக் கழக துணை அமைப்பாளர்கள் மற்றும் இளைஞர் அணியினர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

---

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. சிறப்புரை! சா.தேவராசு தலைமை!

## சென்னை தென் மேற்கு மாவட்ட இலக்கிய அணி ஆலோசனை கூட்டம்!

### மாவட்ட அமைப்பாளர் விஜய் வெங்கடேசன் அறிக்கை!

சென்னை, ஜன.7-

சென்னை தென்மேற்கு மாவட்ட இலக்கிய அணி ஆலோசனை கூட்டம் இன்று (07.01.2025 - செவ்வாய்க்கிழமை ) மாலை 6.30 மணி அளவில் மயிலாப்பூர் சி.பி.ராமசுவாமி சாலை அலுவலகத்தில், மாவட்டத் தலைவர் சா.தேவராசு தலைமையில் நடைபெறுகிறது.

இதில் சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றுகிறார்

எனவே இக்கூட்டத்தில் இலக்கிய அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் , பகுதி அமைப்பாளர்கள், பகுதி தலைவர், பகுதி துணைஅமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் .

பொருள் : பொங்கல் விழா, கழக ஆக்க பணிகள்

இவ்வாறு சென்னை தென்மேற்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் விஜய் வெங்கடேசன் தெரிவித்துள்ளார்.

---

### ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமை! கே.ஏழுமலை எம்.சி. முன்னிலை!

## 135 ‘அ’ வட்டத்தில் துணை முதல்வர் பிறந்தநாள்! நல உதவிகள்!

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை, ஜன.7-

தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு தியாகராயர் நகர் கிழக்கு பகுதி 135வது அ வட்டத்தில் நலத்திட்ட உதவி வழங்கும் விழா இன்று (07.01.2025 செவ்வாய்க்கிழமை) எம்.பி.கே.மஹால், 1வது அவென்யூ, அசோக் நகரில் நடைபெறுகிறது.

விழாவில் நலத்திட்ட உதவிகளை வழங்குபவர் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் திரு. மயிலை த.வேலு எம்.எல்.ஏ, தலைமை: ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, முன்னிலை: தியாகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, 135-அ வட்ட கழக செயலாளர் மு.செல்வகுமார் பங்கேற்கின்றனர்.

இதில் வட்ட கழக செயலாளர்கள் எம்.எஸ்.பழனி, மு.செல்வகுமார், வழக்கறிஞர் எம்.கிருஷ்ணமூர்த்தி மு.ம.செந்தில்குமார், ஜி.பி. செந்தில்குமரன், ஆர்.சக்திவேல் வடபழனி டி.கமல் தட்சன், ஹரிஹரன், ந. மோ.முரளி, கே.எஸ்.வெல்டிங்ராஜா, பி.ஜெயக்குமார், தி.நகர்.பி.மாரி மற்றும்

பகுதி நிர்வாகிகள் மு. மணிவண்ணன், ஜி. மோகன்ராஜ், இரா.பொன்னிவளவன், வி.பி.எஸ். ஜனார்த்தா புஷ்பா, சுப்பிரமணி, ஆ.சண்முகம், கே.பி.செல்வராஜ், வி.சங்கர், பா.அருண்குமார், ஆர். குழந்தைவேலன், எம். ராஜேந்திரன், கே.சந்திரன், எஸ்.முரளி, இளநீர்பாபு, க.சுந்தர், எஸ்.செந்தில் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

இந்நிகழ்ச்சி தியாகராயர்நகர் கிழக்கு பகுதி கழகச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமையில், தியாகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, 135அ வட்ட கழக செயலாளர் மு.செல்வகுமார் ஆகியோர் முன்னிலையில், எஸ். வினோத்குமார், இரா. செந்தில்குமார், சூரியா வி.சரவணன், ஆ. வெங்கடேசன், கோ.லோகநா தன், கார்த்திக் சந்திரகேசன், செ. கிருஷ்ணன், என்.கார்த்திக், எஸ்.திருமால், பவானி பால் வில்லியம், ம.பார்த்திபன், ஜெ. ராஜ்குமார், மு.ஜான்சன், வி.ஜெயசீலன், எம். கார்த்திக்குமார், மு. முத்துரா மன், கோ.பத்மநாபன், கஸ்தூரி முத்து, பூங்கொடி ராஜேஷ், சித்ரா செல்வகுமார், எஸ்.செந்தில், வே.சபாரத்தினம், ஜெ.ஸ்டிபன் ராஜ், எம்.சண்முகப்பிரியன், எம். கே. ராஜேஷ், ச.ஆனஸ்ட் ராஜ், ம.அசோக்குமார், வி. ஜெயந்தீஸ் வரன், சு.சரவணன், கோ. ஆனந்தன், அ. முருகன், காஜாமொய்தீன், ஆர்.எபிநேசர், ஜெ.அனிப், சி.விமல், ஆர்.கார்த்திக், மலர்ராஜா, சசிக்கலா வெங்கடேசன், காயத்திரி, சதிஷ், டி.ஸ்ரீகாந்த், வழக்கறிஞர் வே.வாஞ்சிநாதன், வெ.மேகலாதேவி, ஜெ. குப்பு ஜீவா, சித்ராசேகர், உஷாஎல்சர் ஐமுனா சண்முகம், திலகம் கண்ணன் ஆகியோர் வரவேற்புரையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு, தி.மு.க. தலைமை கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், தகவல் தொழில்நுட்ப அணி துணைச்செயலாளர் தொகுதி பார்வையாளர் திருமதி.எஸ்.பத்மபிரியா, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் மோனிஷா கருணாநிதி ஆகியோர் சிறப்புரை யாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.

இறுதியாக வட்ட கழக செயலாளர் மு.செல்வகுமார் நன்றியரை கூறுகிறார்.

எனவே, இந்நிகழ்ச்சிக்கு வட்ட கழகத்தை சார்ந்த நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்துகொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

---

### தாம்பரம் மேற்குப் பகுதி

## 63வது வட்ட கழக செயலாளர் வ.லோகநாதன் மறைவு!

### எஸ்.ஆர்.ராஜா – கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, ஜன.7-

தாம்பரம் மாநகராட்சி, தாம்பரம் மேற்கு பகுதி, 63வது வட்ட கழகத்தின் செயலாளர் வ.லோகநாதன் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். தகவல் அறிந்து தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அன்னாரின் உடலுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். உடன் மண்டல குழுத் தலைவர் எஸ்.இந்திரன், கி.வேல்மணி, பி.ஜோதிகுமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினார்கள்.

மறைந்த வ.லோகநாதன் அவர்கள் இறுதி ஊர்வலத்தில் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், வே. கருணாநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர் ஆதிமாறன், பகுதி கழக செயலாளர் இரா.சுரேஷ், ஊராட்சி மன்ற தலைவர்கள் ஜனனி சுரேஷ் பாபு, மாமன்ற உறுப்பினர்கள் பி.ஜோதிகுமார், ரமணி ஆதிமூலம், சுரேஷ் லிங்கேஸ்வரி, பாபு, சசிகலா கார்த்தி, சி.ஜெகன், இரா.ராஜா கழக பேச்சாளர்கள் கி.வேல்மணி, எஸ்.ஜி கருணாகரன், இரா.செல்வகுமார், ஜா.ரவிக்குமார், வி.கார்த்திக், ச.ராஜேஷ், எஸ்.கார்த்திக், ஆர்.சஞ்சீவி, மங்களபுரம் பாபு, சீனிவாசகுமார், முத்துமாறன் வட்ட செயலாளர்கள் வட்ட பிரதிநிகள், முன்னாள் நகரமன்ற உறுப்பினர்கள் பகுதி கழக நிர்வாகிகள் இளைஞர் அணி, மாணவர் அணி, மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

---

### சென்னை தென்மேற்கு மாவட்ட

## கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை ச.சண்முகநாதன் மைத்துனர் இரா.ஜெகதீசன் மறைவு!

### கழக முன்னணியினர் அஞ்சலி!

சென்னை, ஜன.7-

சென்னை தென்மேற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளரும், திருத்தணி சட்டமன்றத் தொகுதி தேர்தல் பார்வையாளருமான ச.சண்முகநாதனின் மூத்த மைத்துனர் இரா.ஜெகதீசன் (வயது 67) அவர்கள் 3.1.2025 அன்று இயற்கையெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

தூத்துக்குடி மாவட்டம், அத்திமரப்பெட்டி சாலை விளக்கு, முத்தையாபுரம், சுந்தர் நகர் முதல் தெருவில் வசித்து வந்த இரா.ஜெகதீசன் அவர்கள் சிறிது காலம் உடல்நலம் குன்றி சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை பலனின்றி அவர் இயற்கையெய்தினார்

அன்னாரின் இறுதி ஊர்வலம் 5.1.2025 அன்று மாலை அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு அத்திமரப்பட்டி சாலை விளக்கு, முத்தையாபுரத்தில் உள்ள இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

---



2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பூண்டி மேற்கு ஒன்றியம் எறையூர், கொசவன் பாளையம், கிராமத்தில் மாவட்ட மகளிர் தொண்டர் அணி மற்றும் மாவட்ட அயலக அணி சார்பில் தெருமுனை பிரச்சாரக் கூட்டம் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.மோதிலால் முன்னிலையில் மாவட்ட அமைப்பாளர்கள் கோவிந்தம்மாள், ஜெய் கிருஷ்ணன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு பொதுமக்களிடம் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் நடைபெற்று வரும் திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி பேசினார். உடன் பொதுகுழு உறுப்பினர் ப.சிட்டிபாபு, ஒன்றிய செயலாளர் டி.கிறிஸ்டி, எஸ்.மகாலிங்கம், ஒன்றிய நிர்வாகிகள் தேவேந்திரன், லட்சுமணன், சித்ரா ரமேஷ், நடராஜன், லோட்டஸ் கோபி, சதீஷ், லிங்கேஷ்குமார், ஹேம நாதன், சுதாகர், விக்ரம், ஜோதி, ராமலிங்கம், இளங்கோவன், அன்பழகன், உமா ரங்க நாதன், துளசி ராமன், கௌதம், உள்பட பலர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி கும்மிடிப்பூண்டி ஒன்றியம் மாநெல்லூர் ஊராட்சியில் பழங்குடியினர் நலத் தொகுப்பு வீடுகள் மற்றும் பல்நோக்கு கட்டிடத்தை மாவட்ட செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான மு.மணிபாலன், டி.ஜெ.கோவிந்தராஜன் திறந்து வைத்தார். உடன் பா.செ. குணசேகரன், எம்எல்.ரவி, எஸ்.ரமேஷ், ஜெ.மோகன்பாபு சாரதாமுத்துசாமி. எஸ்.ராமஜெயம், மு.பாஸ்கர், டி.ஜெ. ஜி.தமிழரசன், ஏசுரத்தினம், ஊராட்சி மன்ற தலைவர் லாரன்ஸ், மாதர்பாக்கம் சீனிவாசன், திருஞானம், உதயகாந்தம்மாள் சந்திரமோகன், விஜய்வின்செண்ட் பா.பரத்குமார், என்.பழனி, நாகராஜ், ரவி உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.